பக்கங்கள் 8 ★

# ஈழநாடு The EELANAADU

50 சதம்

மலர் 22 வைகாசி 20 றஜப் 18 இதழ் 113
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 2-6-80

## எம். ஜி. ஆர். வெற்றி

(சென்னை)

அ. தி. மு. க. தலைவரும் முன்னாள் முதல்வருமான திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தி மு.க வேட்பாளரை 21,066 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றார். மதுரை மேற்குத் தொகுதியில் ஏழு முனைப் போட்டியில் திரு. இராமச்சந்திரனுக்கு 57,019 வாக்குகளும் அடுத்தபடியாக வந்த தி. மு. க. வேட்பாளர் திரு. பொன்முத்து ராமலிங்கத்திற்கு 35,953 வாக்குகளும் திரு. வி. காமராஜருக்கு ஜனதா (ஜே. பி) 2,178 வாக்குகளும் கிடைத்தன. (இ)

## அன்பில் வெற்றி

(சென்னை)

லால்குடி தொகுதியில் போட்டியிட்ட தி மு க முன்னாள் அமைச்சர் திரு. அன்பில் தர்மலிங்கம் வெற்றிபெற்றுள்ளார்.

# அதிமுக பெருவெற்றி! மீண்டும்

# தமிழகத்தில் எம். ஜி. ஆர். ஆட்சி!

## பழைய இடங்கள் பலதை கலைஞர் கட்சி பறிகொடுத்தது

(சென்னை)

தமிழகத்தில் மீண்டும் எம். ஜி. ஆர். தலைமையிலான அதிமுக கழகமும், அதன் கூட்டணியும் ஆட்சி பீடத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றது. எம். ஜி. ஆர். தலைமையிலான கூட்டணிக்கு அறுதிப்பெரும்பான்மைப் பலம் கிடைத்துவிட்டது தமிழகத்தில் மீண்டும் எம் ஜி ராமச்சந்திரன் முதலமைச்சராகவும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. மு கருணாநிதி எதிர்க்கட்சித் தலைவராகவும் பதவியேற்பார்களென்பது தெளிவாகிவிட்டது.

234 ஸ்தானங்களைக்கொண்ட தமிழக சட்டசபைக்கு நடந்த இடைத் தேர்தல் முடிவுகள் நேற்றுப் பிற்பகலிருந்து வெளிவரத் தொடங்கின நேற்றிரவு பத்து மணியளவில் திரு எம் ஜி ராமச்சந்திரன் மீண்டும் தமிழ்நாட்டின் முதலமைச்சராவாரென்பது தெளிவாகிவிட்டது, எம் ஜி ஆர் கட்சி தனியாகவே அறுதிப் பெரும்பான்மை பெற்றுவிட்டது

அதிமுக தலைவர் திரு. எம். ஜி. ஆர். உட்பட பல அமைச்சர்கள் வெற்றி அடைந்துள்ளனர்.

சில முன்னாள் திமுக அமைச்சர்கள் உட்பட பல தலைவர்கள் தோல்வி அடைந்துள்ளனர்.

வடக்கிலுள்ள ஏனையஎட்டு மாநிலங்களில் இந்திரா காங்கிரஸ் முன்னணி வகிக்கின்றது.

அதிமுக தனித்தும் மிகக் கூடுதலாக 111 தொகுதிகளைக் கைப்பற்றியுள்ளது.

### அறுதிப்பெரும்

வடக்கு மாநிலங்களான குஜராத், பஞ்சாப், ஆகிய மாநிலங்களில் இந்திரா காங்கிரஸ் அறுதிப் பெருமான்மை பலத்தைப் பெற்றுள்ளது. (இ)

## கருணாநிதி நிலை!

(சென்னை)

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி போட்டியிடும் அண்ணாநகர் தொகுதியில் வாக்குகள் மீண்டும் எண்ணப்படுகின்றன.

கருணாநிதியை எதிர்த்து இத் தொகுதியில் போட்டியிடும் அ. தி. மு. க. வேட்பாளர் டாக்டர் எச். வி. ஹண்டேயின் வேண்டுகோளையடுத்து அங்கு மீண்டும் வாக்குகள் எண்ணப்படுகின்றன.

## இந்திரா காங்கிரஸ் வெற்றிநடை

(புதுடில்லி)

சட்டசபைத் தேர்தல் நடைபெற்ற தமிழ்நாடு தவிர்ந்த ஏனைய எட்டு மாநிலங்களிலும் திருமதி இந்திரா காந்தி தலைமையிலான இந்திரா காங்கிரஸ் கட்சி அறுதிப்பெரும்பான்மை பலம்பெற்று ஆட்சி அமைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

உத்தரப்பிரதேசம், பஞ்சாப், ஒரிஸ்ஸா, குஜராத், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், பீகார், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இந்திரா காங்கிரஸ் கட்சி வெற்றிப் பாதையில்சென்றுகொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### சரத்பவார், நந்தினி சத்பதி

மகாராஷ்டிர முன்னாள் முதல்வரும் பிரதேசகாங்கிரஸ் கட்சித் தலைவருமான திரு. சரத்பவார் வெற்றிபெற்றுள்ளார். இந்திராகாங்கிரஸ் வேட்பாளரை 28 ஆயிரம் வாக்குகளால் வெற்றிபெற்றுள்ளார்.

முன்னாள் ஒரிஸ்ஸா முதல்வரும் அர்ஸ் காங்கிரஸ் தலைவருமான திருமதி நந்தினி சத்பதியும் வெற்றிபெற்றுள்ளனர்.

## மனோகரன், கண்ணப்பன், சாதிக் பாஷா தோல்வி

[சென்னை]

சென்னை மயிலாப்பூர் தொகுதியில் தி. மு. க. சார்பில் போட்டியிட்ட முன்னாள் அ தி மு க நிதியமைச்சர் திரு. கே மனோகரன் தோல்வியடைந்துள்ளார்

முன்னாள் தி மு க அமைச்சர்களான ஜனாப் சாதிக் பாட்ஷா, திரு கே. கண்ணப்பன், லோகதள் தமிழ்நாடு தலைவர் டாக்டர் சந்தோஷம் தோல்வியடைந்துள்ளார்.

தி மு. க. பொருளாளருமான ஜனாப் சாதிக்பாட்ஷா ஆயிரம் விளக்குத் தொகுதியில் அ தி மு க முன்னாள் அமைச்சர் திரு. [illegible] சாமியிடம் 307 வாக்குகளால் தோல்வியடைந்தார்.

## அன்பழகன் எஸ். எஸ். ஆர். வெற்றி

[சென்னை]

சென்னை புரசவாக்கம் தொகுதியில் தி. மு. க. பொதுச்செயலாளர் திரு. கே. அன்பழகன் அ தி மு க ஆதரவுபெற்ற கிறிஸ்தவ ஜனநாயக கட்சி வேட்பாளர் திரு. வலம்புரிஜோனை 5000 வாக்குகள் வித்தியாசத்தால் தோற்கடித்தார்.

ஆண்டிப்பட்டி தொகுதியில் அ தி மு க வேட்பாளர் திரு. எஸ். எஸ். ராஜேந்திரன் இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் திரு. கே. கந்தசாமியை 27 ஆயிரம் மேலதிக வாக்குகளால் தோற்கடித்தார்.

அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர்கள் திரு. காளிமுத்துவும், திரு. சோமசுந்தரமும் பண்ருட்டி ராமச்சந்திரன் சி. பொன்னையன் ஆகியோரும் வெற்றிபெற்றுள்ளனர். தி மு க வேட்பாளர் திரு சுப்பு வில்லிவாக்கம் தொகுதியில் [illegible] திரு. பிரபாகரனிடம் தோல்வியடைந்தார்.

## தமிழகத் தேர்தல் முடிவுகள்

கட்சிகள் நிலவரம்:

| | |
|---|---|
| மொத்த ஸ்தானங்கள் | 234 |
| வெளியான முடிவுகள் | 224 |
| அ. தி. மு. க. | 125 |
| தி. மு. க. | 36 |
| இந்திரா காங்கிரஸ் | 28 |
| இந். மார்க்ஸிஸ கம்யூ. | 11 |
| இந்திய கம்யூனிஸ்ட் | 10 |
| ஜனதா (ஜே. பி.) | 02 |
| சுயேச்சை (ஏனையவை உட்பட) | 12 |
| அ. தி. மு. க. கூட்டணி | 153 |
| தி. மு. க. கூட்டணி | 64 |

## நெடுஞ்செழியன் வெற்றி

[சென்னை]

தமிழகத்தில் போட்டியிட்ட அ தி மு க பொதுச்செயலாளர் திரு. வி. ஆர் நெடுஞ்செழியன் தமிழக இந்திரா காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு. கே. இளையபெருமாள், முன்னாள் அ. தி மு க அமைச்சர்களான கே ராஜாராம், திரு. கே அரங்கநாயகம் கே ஏ கிருஷ்ணசாமி திரு. ஆர். சௌந்தரராஜன், திரு. குழந்தைவேலு மார்க்ஸிய கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர் திரு ஆர். உமாநாத் ஆகியோர் வெற்றிபெற்றுள்ளனர்.

### நெடுஞ்செழியன்

திருநெல்வேலியில் போட்டியிட்ட திரு. நெடுஞ்செழியன் இந்திராகாங்கிரஸ் வேட்பாளர் திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதத்தை 14,906 வாக்குகளால் வெற்றிபெற்றார்.

முன்னாள் அமைச்சர் திரு. கி. அரங்கநாயகம் கோயம்புத்தூர் மேற்குத் தொகுதியில் தி மு க வேட்பாளர் திரு. எம் இராமநாதனை 1500 வாக்குகளால் வெற்றிபெற்றார்.

## இந்திய சட்டசபைத் தேர்தல் : 61 பேர் பலி!

(புதுடில்லி)

ஒன்பது இந்திய மாநிலங்களிலும் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலை ஒட்டி இடம்பெற்ற கலவரங்களில் 6 வேட்பாளர்கள் உட்பட 61 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர் பீகாரில் மட்டும் 24 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர் இங்கு 880 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ)

## மத்திய கல்லூரி விவகாரம் நிர்வாகம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மத்தியகல்லூரி மாணவர்கள் மத்தியில் எழுந்துள்ள பாடசாலை நிர்வாகத்தின் மீதான இரண்டு தவறான வதந்திச் செய்திகளால் மாணவர்கள் பாடசாலையைப் பகிஷ்கரித்து வருவதாக பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி பாடசாலை மாணவர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்துப் பாடசாலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர் இவர்கள் இன்று திங்கட்கிழமை முதல் உண்ணாவிரதம் இருக்கப்போவதாகவும் அறிவித்துள்ளனர்.

[8-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

கதிப்பூரவேலை தெரிந்த பெண்கள் தேவை தொடர்பு கொள்ளுங்கள். செல்வன் ஸ்ரோர்ஸ் (மேல் மாடி) No. 1026 K. K. S. றோட், யாழ்ப்பாணம். 5932

## விற்பனைக்கு

தனிநபர் பராமரிப்பிலுள்ள தெற ண்டா றோட்மாஸ்டர் 185—10 சிசி தோட்ட யிலக்கமுடையது உடன் விற்பனைக்குண்டு. ந. அரியரத்தினம் புளியம்பொக்கணை 5983

## ஊழியர்கள் —

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பி.எல் வீரசிங்கா என்பவர் பொல்லால் தாக்கி கொலை செய்ய எத்தனித்ததாக வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிமன்றத்தில் சாக்கோசன்தலைப்பெ விசாரிவ் வழக்கை தாக்கல் செய்தலைதுத்த வழக்கின் விசாரணையை இம்மாதம் 25ம் திகதிக்கு பதில் நீதிபதி கிருஷ்ணாம்பிராக்திலம் ஒத்திவைத்தார்.

# ஒப்பந்தங்கள் சிதைந்து . . .

(7ம் பக்கத் தொடர்ச்சி)

யிலும், இளைஞர்களான ஏனைய சங்கைத் தலைவர்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் தமிழ்ப் பிரதேசங்களைத் தொழில்துறையில் மேம்படுத்துவதற்கான தொழிற்சாலைகளை நிறுவினார் ஆனால், ஒற்றுமை பேச்சுப்பேசி, அந்த பிரதிநிதிகளைப் பெற்ற தமிழரசுக் கட்சியினரால் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தை ஆதரித்து திருச் செல்வத்தை அமைச்சராக்கிய பொழுதிலும் மாவட்ட சபைகளை நிறுவ முடியவில்லை என்றால் அதற்குக் காரணம் அவர்களின் திறமையற்ற தலைமையும் சந்தர்ப்பவாத முறைமையாகும்.

### எதிர்த்ததில் தவறில்லை

அரசாங்க மொழி சிங்களம் தான். அதனை மாற்றும் நோக்கமில்லை என்று சொன்ன அமைச்சர் திருச்செல்வநாயகம், தமிழ் மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முடியாத மாவட்ட சபைகளையும் காங்கிரஸ் எதிர்த்ததில் தவறில்லை. தமிழரசு காணப் போனவர்கள் மாவட்ட சபைகளைப் பணயமிட்டு மந்திரிப்பதவி ஏற்றதே தவறு. அன்று காங்கிரசிலிருந்த மூன்றைய கூட்டணித் தலைவர் குமாரசூரியரும் சிவசிதம்பரமும், காங்கிரசை எதிர்த்தார்கள். மாவட்ட சபைகளை நிறுவ முடியவில்லை என்பது கையாலாதவன் பேச்சு. மக்கள் ஒற்றுமையாக இவர்களை ஆதரித்து என்ன பயன்? அரசியல் சதுரங்கம் தெரியாதவர்கள் அந்த ஆட்டத்திற்குப் போகக்கூடாது. அதற்கு விளக்கம் தெரியாதவர்கள் விளங்கியவர்களாக நடிக்கவும் தேவையில்லை. போராட்டத்தைக் கைவிட்ட அமிர்தலிங்கம், ஜே. ஆர் ஜயவர்த்தனவுடன் கூடி அரசியல் சூதாட்டத்தில் தோல்வியே அடைந்துவருகிறார்.

### தலைவர்கள் செய்த இரகசிய ஒப்பந்தம்

பண்டாரநாயக்க - செல்வநாயகம்; டட்லி- செல்வநாயகம் ஒப்பந்தங்களில் நாட்டில் என்ன நடக்கிறது என்று அறிய உரிமையுடைய மக்கள் அறியாத வகையில் மூடி மறைத்து இருட்டில் இன்தலைவர்கள் தங்களுள் ஒத்துழைப்பதற்காக இரகசியமாக ஒப்பந்தம் செய்த அரசியல் ஞானமற்ற செயலும், தமிழரசுக்கு பலிபடி என்று தமிழரசுக் கட்சியினர் பழமொழியையும், ஒப்பந்த அறிவுக்கு மூலகாரணமாகும். சிங்கள மக்கள் மத்தியில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகப் போராடி வரும் இருபெரும் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தமிழினத்திற்கு நன்மை தரத்தக்க இவ் ஒப்பந்தங்களை அரசியல் போட்டா போட்டிக்காக மாறி மாறி எதிர்த்து வந்திருக்கின்றன.

இதனை நன்குணர்ந்துதான், தமிழ் இனத்தின் உயிர்ப்பிரச்சனைகளை கட்சி அரசியலுக்கு அப்பாற்படுத்தி இருகட்சிப் பிரச்சனையாகக் கருதாமல் சகல கட்சிகளும் அடங்கி வட்டமேசை மகாநாட்டின் மூலம் தீர்க்க வேண்டுமென்று காங்கிரஸ் தலைவர் ஜீ. ஜீ. கடந்த காலங்களில் கூறி வந்துள்ளார் என்பதை, தமிழீழ போராட்டத்தைக் கைவிட்டு ஜே ஆருடன் அரசியல் சூதாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் கூட்டணி அரசியல் ஞானசூனியங்கள் உணருமா? ஒற்றுமையின் பேரால் இத்தகைய அரசியல் சூதாட்டக்காரர்களின் கூட்டணியைத் தமிழினம் இனியும் ஆதரிக்குமா? அமிர்தலிங்கத்திற்கு இருக்கும் கவலை எல்லாம் தங்கள் துரோகத்தை அம்பலப்படுத்த ஒருவரும் எதுவும் இருக்கக்கூடாது என்பது தான்.

தமிழ் மக்கள் ஒற்றுமையாக 1956 தொடக்கம் இன்றுவரை தமிழ் சுக்கட்சியையும் கூட்டணியையும் பாராளுமன்றத்திற்குப் பெரும்பான்மைப் பலத்துடன் அனுப்பி வந்துள்ள போதிலும் தமிழினம் இவர்

[8-ம் பக்கம் பார்க்க]

# இலங்கை...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணத் தொழிற்பாடுகளையும் மொழியும் ஆகிய பொதுத் தலைப்புகளின் கீழ் நடைபெறும் நான்கு முக்கிய அமர்வுகளில் பதினான்கு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட உள்ளன. இலங்கையிலே தமிழ் நாட்டார் வழக்கியல் பற்றி விரிந்த அளவில முதன் முறையாக நடைபெறும் இக் கருத்தரங்கு இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல் ஆய்வு வரலாற்றில் முக்கியமான ஒன்றாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## WANTED

Accounts - Clerk Trainee (Female) Qualifications G. C. E. (O L) with credit in English as a Subject. Apply immediately to: Greenfield Travel Operators, 26, Model Market Jaffna. 5935

## 1-வது நினைவாஞ்சலி

### அருணாசலம் அருங்குணநாதன்



தோற்றம்: 16 3-1954

மறைவு: 15-5-1979

உமது பிரிவால் தந்தையார் வாட, தாயார் துயருற, சகோதர சகோதரிகள் வருந்த, நண்பர்கள் உறவினர்கள் ஏங்குகின்றனர். உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்,

குடும்பத்தினர்

35/4, நாச்சாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம் 5934

# அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் கோவில் தொண்டர்சபையினரால் 31-5-80 அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட அதிர்ஷ்டசாலிகளின் விபரம் பின்வருமாறு:

| | | அதிர்ஷ்ட எண் | பெயரும் விலாசமும் |
|---|---|---|---|
| 1-வது பரிசு | (1) | 6430 | S நளாயினி, காளிகோவலடி, குட்டிபுலம், மூளாய். |
| ,, | (2) | 8503 | S. செல்வகுமாரி, விமன்காமம், தெல்லிப்பழை. |
| ,, | (3) | 4421 | அ. அன்ரன், 2-ம் கட்டை, முரசுமோட்டை, பரந்தன். |
| 4-வது பரிசு | | 7209 | ரஞ்சனுஸ், நவீனசந்தை, யாழ்ப்பாணம். |
| 5-வது பரிசு | | 4943 | வைத்தீஸ்வரன், கந்தரோடை. |
| 6-வது பரிசு | | 8934 | கவிதா, அளவெட்டி வடக்கு, அளவெட்டி |
| 7-வது பரிசு | | 6132 | C L 4796, அளவெட்டி. |
| 8-வது பரிசு | | 3090 | R. பத்மகிருஷ்ணன், புகையிரதநிலைய வீதி, சுன்னாகம். |
| 9-வது பரிசு | | 6280 | K. செல்வராசா, அராலி றோட், சங்கானை. |
| 10-வது பரிசு | | 1629 | திருமதி R. T கபிரியல், தபாற்கந்தோர், நுவரெலியா |
| 11-வது பரிசு | | 3862 | வ. சரவணமுத்து, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை |
| 12-வது பரிசு | | 11826 | ஶ்ரீதரன்; பன்னாலை, தெல்லிப்பழை. |
| 13-வது பரிசு | | 12662 | செல்வி S. அரசரட்ணம், "அரசஸ்தான்", அளவெட்டி. |
| 14-வது பரிசு | | 3287 | சி சந்திரநாதன், பெற்றோல் செட், மருதனார்மடம். |
| 15-வது பரிசு | | 11266 | ஆ. அடைக்கலம், தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை |
| 16-வது பரிசு | | 10286 | S கலைவாணி, இளாலை, சுதுமலை. |
| 17-வது பரிசு | | 5391 | K. பிரேமச்சந்திரன் அளவெட்டி வடக்கு, அளவெட்டி |
| 18-வது பரிசு | | 7573 | க விக்கிராசா, அளவெட்டி வடக்கு, அளவெட்டி. |
| 19-வது பரிசு | | 8716 | சி கிரிதரன், பெரியவிளான், இளவாலை. |
| 20-வது பரிசு | | 8539 | செ சரஸ்வதி, அளவெட்டி வடக்கு, அளவெட்டி. |
| 21-வது பரிசு | | 3938 | வே. பரமானந்தன், டக்கறோட், அளவெட்டி. |

கும்பழாவளை தொண்டர்சபை,

அளவெட்டி.

5931


# விவசாயிகளே!

மிளகாய் குருமன் (இலைச்சுருள்) நோய் விளைச்சலைக் குறைக்கின்றதா?

உடனே பாவியுங்கள்!!



ஜேகெம் சல்பர் 80%

(நீரில் கரையும் 80% கெந்தகம்)

இது ஒரு மேற்குஜேர்மனித் தயாரிப்பாகும்

கலவை: 30 மி/லீற் பரத்தியன் 6/3 உடன் 180 கிறாம் ஜேகெம் சல்பர் 80% 54 லீற்றர் நீரில்கலந்து தெளிக்கவும்.

(1அவுன்ஸ் பரத்தியன் 6/3 உடன் 6 அவுன்ஸ் கெந்தகம் 12 கலன் நீரில்)

500 கிராம் பைக்கட் ரூபா 10-00 மட்டுமே

ஏக விநியோகஸ்தர்கள்:

ஜேகெம்,

39. பிறிஸ்டல் பில்டிங்,
51, யோர்க் வீதி. கொழும்பு-1.
தொலைபேசி: 24353

கிடைக்குமிடம்:

அக்றேஸ் லிமிட்டெட்,

59, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

நல்லோருக்குச் செய்த உதவி மிகுதியான நன்மையே தரும். அற்பர்களுக்குச் செய்த உதவி செய்தவனுக்கே மிகுந்த அபாயத்தை விளைவிக்கும்.

—விவேகசிந்தாமணி.

## மக்கள் கருத்து

### விடுதலைக்கு மக்கள் தயாரா?

"தமிழ் ஈழம்" என்றும் விடுதலை என்றும் இந்த இலட்சியத்தை அடையப் போராட வேண்டுமென்றும் இப்போது மீண்டும் சிலர் குரல் எழுப்பி வருகின்றனர். மேடைப்பேச்சுக்களும் எழுத்துக்களும் உணர்ச்சியை ஏற்படுத்துகிறது. கரகோஷம் கிடைக்கிறது.

விடுதலை வேண்டாமென்று எந்தத் தமிழனும் சொல்லமாட்டான். ஆனால் "விடுதலை" "தமிழ் ஈழம்" என்று கூச்சல் போடுவதால் விடுதலை கிடைத்துவிடுமா, "தமிழ் ஈழம்" அமைத்துவிட முடியுமா?

இந்திய விடுதலைக்குப் போராடிய காந்தி மகாத்மா நான்கு அம்ச நிர்மாணத் திட்டம் வகுத்து மக்களை ஐக்கியப்படுத்தி விடுதலைக்கு மக்களைத் தயார்படுத்தினர். (அப்படித் தயார்செய்து அகிம்சை மூலம் விடுதலைபெற்றுக்கொடுத்த இந்தியாவிலேயே இன்று காந்தியை மறந்துவிட்டார்களே!

இங்கு தமிழ்ச் சமுதாயம் விடுதலைக்குத் தயாரா; அவர்களைத் தமிழ்த் தலைவர்கள் முதியவர்களும் சரி இளைஞர்களும் சரி தயார்படுத்தியிருக்கிறார்களா? இனவிடுதலைக்கு முன் சமுதாயத்திலுள்ள கேடுகளை நீக்கி சமுதாயத்தைச் சீர்செய்து ஐக்கியத்தை உருவாக்கி விடுதலைப் போராட்டத்தைத் தொடங்கவேண்டும்.

தீண்டாமை ஒழிப்பு, சீதன ஒழிப்பு, சுயதொழில் முயற்சி, சுரண்டல் ஒழிப்பு முதலியன தேவை. பண்பாடுள்ள சமுதாயமே விடுதலைக்குத் தகுதி பெற்றது. இன்று பண்பாடு எந்தநிலையிலிருக்கிறது. திருக்குறள் மாநாடுகள் நடத்துகிறோம், பேசுகிறோம் இதனால் பண்பாடு வளர்ந்துவிடுமா?

விடுதலைக்கு மக்களைத் தயார் செய் மகாத்மா ஒரு சந்தர்ப்பத்தில் மக்கள் தவறாக நடந்துகொண்டபோதுதான் மக்களைத் தவறாக எடைபோட்டுவிட்டதை எண்ணி "இமாலயத் தவறு செய்துவிட்டேன்" என்று பகிரங்கமாகத் தெரிவித்து போராட்டத்தையே அச்சந்தர்ப்பத்தில் வாபஸ் பெற்றார்.

விடுதலைக்குப் போராடத் தொடங்குவதற்குமுன் மக்கள் அதற்கான பக்குவம்பெற வேண்டும் அதற்கு அவர்களைத் தயார்செய்ய வேண்டியது அவசியம்.

கோபால்
யாழ்ப்பாணம்.

### மூடுவதற்கு நடவடிக்கை

(பண்டத்தரிப்பு)

சங்கானை பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் வட்டுக்கோட்டை கிழக்கிலுள்ள தனது 18வது இலக்கக் கிளையை மூடிவிடுவதென்று தீர்மானித்துள்ளது. இக்கிளையைத் தொடர்ந்து இயங்கச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு வட்டுக்கோட்டை தொகுதி எம். பி. திரு. அ. திருநாவுக்கரசுவை வட்டு கிழக்கு தாவளை கிராம அபிவிருத்திச் சங்கம் கேட்டுள்ளது.

# 'கூட்டணி பாராளுமன்ற இயக்கமானால் விடுதலை இயக்கம் ஒன்று தோன்றும்'

(மாவிட்டபுரம்)

தமிழர் விடுதலைக் கூட்டணி தொடர்ந்தும் பாராளுமன்ற இயக்கமாக விளங்கினால் விடுதலை இயக்கத்துக்கான ஓர் தலைமை தோன்றுவது ஆச்சரியப்படத்தக்க தல்ல என்று திரு. ஈழவேந்தன் காங்கேசன்துறைபட்டினசபை மண்டபத்தில் நடந்த கருத்தரங்கில் கூறினார்.

திரு. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் ஈழவேந்தன் குறிப்பிட்டதாவது:

**விடுதலை இயக்கத்துக்கு ஓர் தலைமை**

தமிழர் விடுதலைக்கூட்டணி ஒரு விடுதலை இயக்கமாக விளங்கவேண்டும் அல்லது பாராளுமன்ற இயக்கமாக விளங்கவேண்டும். இரண்டையும் அவர்கள் செய்யமுடியாது அவர்கள் தொடர்ந்தும் பாராளுமன்ற இயக்கமாக விளங்கினால் விடுதலை இயக்கத்திற்கான ஒரு தலைமை தோன்றுவது ஆச்சரியப்படத்தக்க தல்ல அண்ணன் அமிர்தலிங்கம் எமது இனவிடுதலைப் பாதையை முன்னெடுத்துச் செல்வார் என நம்பினோம் ஆனால் அவரை வேறு சிலர் திசைதிருப்பிச் செலுத்துகிறார்கள். அதனுள் அகப்பட்டு அவர் வேறு திசையில் செல்கிறார். ஆகவே தான் நாம் அதனைச் சுட்டிக்காட்டினோம் கட்டுப்பாட்டை மீறிவிட்டோம் என குற்றஞ்சாட்டப்பட்டோம்."

இக்கருத்தரங்கில் மேலும் இரா வாசுதேவா திரு ப. இறைகுமாரன் பன்னீர்செல்வம் ஆகியோரும் பேசினர்.

கேள்விக்கணைகளும் தொடுக்கப்பட்டு பதில் அளிக்கப்பட்டது.

### நல்லூரின் சிறப்புப்பற்றிய ஆய்வுநூல்

(யாழ்ப்பாணம்)

"நல்லூரின் சிறப்பும், நல்லூரான் மகிமையும்" என்ற தலைப்பிலான நூல் ஒன்று வெளிவரவிருக்கிறது முல்லைத்தீவுக் கச்சேரி காணிப்பகுதி லிகிதரும் நல்லூர் குமார வீதியைச் சேர்ந்தவருமான திரு. ஐயாத்துரை கார்த்திகேசு இந்நூலை எழுதுகின்றார்.

பல பழம் நூல்களின் துணையோடு எழுதப்படும் இந்நூலுக்கு மேலும் தகவல்கள் கொடுக்க விரும்புபவர் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு திரு. கார்த்திகேசு கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

# தமிழகத்தில் 65 வீதமானோர் வாக்களித்தனர்

## ஆண்களே அதிகம்

சென்னை, ஜூன், 1

தமிழக சட்டசபைத் தேர்தலில் 60 முதல் 65 வீதமானோர் நேற்று முன்தினம் வாக்களித்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2ம் இறுதிக்கட்ட வாக்களிப்பின் போது நேற்று முன்தினம் பெண்களைவிட ஆண்களே கூடுதலாக வாக்களித்தனர்.

கடந்த புதனன்று நடைபெற்ற முதல்கட்ட தேர்தலில் 66 வீதமானோர். வாக்களித்திருந்தனர்.

இரண்டாங்கட்ட வாக்குப் பதிவுகளின் போது தஞ்சாவூரிலேயே ஆகக்கூடுதலாக 75 முதல் 80 வீதமானோர் வாக்களித்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது:

**கருணாநிதியின் அண்ணாநகரில்**

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி போட்டியிட்ட அண்ணாநகர் தொகுதியில் 72 வீதமானவர்கள் வாக்களித்துள்ளனர். காலை முதல் மாலை வரை விறுவிறுப்பாகவும் சராசரி நிமிடத்திற்கு ஒன்று என்ற விகிதத்தில் வாக்களிப்பு இடம் பெற்றதாகவும் அறிவிக்கப்பட்டது.

**எம். ஜி. ஆரின் தொகுதியில்**

அ. தி. மு. க. தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் போட்டியிட்ட மதுரை மேற்கு தொகுதியில் குறைந்த தொகை மக்களே வாக்களித்தனர் என்றும் எவரும் குறிப்பாக பெண்கள் வாக்களிப்பில் அக்கறை காட்டவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

**மூன்று முன்னாள் முதல்வர்கள் வாக்களித்தனர்**

தமிழகத்தின் முன்னாள் முதல்வர்களான திரு மு கருணாநிதி, ஆயிரம் விளக்கு, திரு எம். ஜி இராமச்சந்திரன் (திருவல்லிக்கேணி), திரு. எம். பக்தவத்சலம் (மயிலாப்பூர்) ஆகியோரும் இன்று தமது வாக்குகளை அளித்தனர். (இ)

# சிமெந்து ஆலை ஊழியருக்கு இவ்வாரம் கட்டாயலீவு?

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் ஊழியர்களை ஒரு வாரகாலக் கட்டாய லீவில் செல்லுமாறு தொழிற்சாலை நிர்வாகம் பணித்துள்ளதாம்.

சீமெந்துக் கூட்டுத்தாபனத் தலைமையகத்திலிருந்து கிடைத்த அறிவித்தலைபடுத்து, தொழிற்சாலை நிர்வாகம் தொழிலாளர்களுக்கு இந்தப் பணிப்பை விடுத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஜூன் 2ந் திகதி தொடக்கம் ஒரு வார காலத்திற்கே இவ்வாறு கட்டாய லீவில் தொழிலாளர்கள் செல்லவேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ளதாம்.

மின் தட்டுப்பாடு காரணமாகத் தொழிற்சாலையில் வேலைகள் ஸ்தம்பிதமடைவதாலா? அல்லது வேறு காரணங்களுக்காகவா? இந்தப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதெனத் தொழிலாளர்களிடையே கேள்வி எழுந்துள்ளது.

இது பற்றித் தொழிற்சங்கங்கள் ஆராய்ந்துவருகின்றன.

இந்த ஒரு வாரகாலத்தில் தொழிற்சாலையின் முக்கிய வேலைப் பகுதிகளைத் தவிர ஏனைய பகுதிகள் இயங்காதெனத் தெரிவிக்கப்படுகிறது.

# தமிழகத் தேர்தல்: சில சம்பவங்கள்

சென்னை, ஜூன், 1

தமிழக சட்டசபைத் தேர்தலின் இரண்டாம் கட்டவாக்களிப்பு நேற்று முன்தினம் நடைபெற்றபோது ஆங்காங்கே சில இடங்களில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன.

திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு இடத்தில் வெடிகுண்டுகள் வீசப்பட்டன. ஜீப் வண்டியொன்றில் சென்று கொண்டிருந்த பொலிசார்மீது ஒருவர் வெடிகுண்டு வீசிய போது அது ஜீப்வண்டிக்குப் பக்கத்தில் வெடித்தது. வெடிகுண்டை வீசிய ராஜமோகன் என்ற இளைஞரை பொலிசார் துரத்திப்பிடித்தனர்.

**பொலிசார் மீது குண்டுவீச்சு**

தூத்துக்குடியில் ஜீப்பில் வந்துகொண்டிருந்த பொலிசார்மீது எதிராக வந்துகொண்டிருந்த ஜீப்பில் இருந்தவர்கள் மூன்று வெடிகுண்டுகளை வீசியபோதும் பொலிசார் தெய்வாதீனமாக உயிர்தப்பினர்.

கோயம்புத்தூரில் அ தி. மு. க — தி. மு. க. ஆதரவாளர்களிடையே இடம்பெற்ற மோதலில் 7 பேர் பலத்தகாயமடைந்தனர் இவர்களில் 5 பேர் அ. தி. மு. க. ஆதரவாளர்களாவர்.

**அ. தி. மு. க. ஊழியர்கள் காயம்**

சென்னையில் அ தி மு. க. ஆதரவாளர்கள் சென்றுகொண்டிருந்த வான் ஒன்று விபத்துக்குள்ளானதில் 25 பேர் காயமடைந்தனர். இவர்களில் 5 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது

**வாக்கு அட்டையில் துவாரமிட்டனர்**

பட்டுக்கோட்டை தொகுதியில் ஒரு வாக்குச்சாவடியில் வாக்களித்த பலர் வாக்கு அட்டையில் புள்ளடி இடுவதற்குப் பதிலாக துவாரமிட்டனராம்.

**வாக்குச்சாவடியில் பொலிஸ்காரர் கைது**

திருச்சிமாவட்டத்தில் தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ்காரர் ஒருவர் சாவடியில்குடிபோதையில் கலாட்டா செய்ததாகக் கைதுசெய்யப்பட்டுள்ளார். (கு)

### "வவனியா - மதவாச்சி இணைப்பை எதிர்த்துப் போராட வேண்டும்"

(மாவிட்டபுரம்)

"வவனியா - மதவாச்சி இணைப்பு வாக்குறுதி காரணமாகத் தற்சமயம் அமுல்படுத்தப்படாவிட்டாலும், அது சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் நிச்சயம் அமுல்படுத்தப்படலாம். அது மட்டுமன்றி, இனிமேல் விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழ் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆட்சி வரமுடியாத நிலை ஏற்படுமாதலால் இச் சட்டத்தை நீக்கவும்முடியாது போய்விடும். ஆகவே இச்சட்டத்தை நீக்கும்படி அரசாங்கத்தை வற்புறுத்தவோ, அதை எதிர்த்துப் போராட்டம் நடத்தவோ காலந்தாழ்த்தாது கூட்டணி நடவடிக்கை எடுக்கவேண்டும்."

இவ்வாறு காங்கேசன்துறைப் பட்டினசபை மண்டபத்தில் நடந்த இளைஞர் பேரவைக் கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசிய கோவை மகேசன் கூறினார்.

திரு பொன்னம்பலம் தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் அவர் மேலும் கூறியதாவது:

"உலகில் ஒடுக்கப்பட்ட மக்கள், அடக்கப்பட்ட மக்கள் தமது சுதந்திரத்துக்காகப் போராடுகிறார்கள் பாலஸ்தீன மக்கள் போராடுகிறார்கள். தென் பிலிப்பீன்ஸ் மக்கள் போராடுகிறார்கள். ஸ்பெயினில் மக்கள் போராடுகிறார்கள். ஆனால் நாம் சுதந்திரம் பற்றி, விடுதலை பற்றியெல்லாம் பேசுகின்றோம். உத்தியோக வாய்ப்புக்கள், பாடசாலைக் கட்டிடங்கள், வீதிகள் அமைத்தல் ஆகியவற்றிலேதான் கவனஞ்செலுத்தி வருகிறோம்.

"நாம் சில சலுகைகள் பெறவேண்டுமென்பதற்காக வாழக்கூடாது. எமது இனத்தின் வாழ்வை நிர்ணயிக்கக் கூடியதான தமிழ் ஈழ அரசை நிறுவும் பணியில் முன்னின்று உழைக்கவேண்டும்.

"வாக்குறுதிகள், ஒப்பந்தங்கள் எதிலும் எமக்கு நம்பிக்கையில்லை. காலத்திற்குக் காலம் சிங்களத் தலைவர்கள் அவற்றை அளித்து, பின்னர் ஏமாற்றிவிட்டனர். ஆகவே இனியும் நாம் ஏமாறமாட்டோம் என அண்ணன் அமிர்தலிங்கம் 1977 தேர்தலின் போது கூறினார். ஆனால் இன்று அதை மறந்து வாக்குறுதிகளை நம்பும் நிலையில் இருந்துவருகிறார். அவர்களாக எந்த அநீதியையும் இழைக்கலாம். ஆனால் நாமும் அனுமதித்துக்கொண்டிருக்காமல் இழைக்க விடுவதுதான் தவிர்க்கப்படவேண்டியது.

### "6 பஸ்களை காரைநகருக்கு தருக"

(பண்டத்தரிப்பு)

விரைவில் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு வரவுள்ள 25 புதிய பஸ் வண்டிகளில் 6 பஸ் வண்டிகளை காரைநகர் இ. போ. ச டிப்போவிற்கு அனுப்பி வைக்குமாறு வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. அ. திருநாவுக்கரசு வடபிராந்திய போக்குவரத்து சபையின் தலைவர் திரு டட்லி குணசேகராவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கைப்பணி 80

## மே 30-ஜூன் 6 வரை

## பாரம்பரிய நவீன கைப்பணிப் பொருட்காட்சியும் விற்பனையும்




**ஏன இந்தக கைபபணி வாரம?**

பாரம்பரியத திறமைகளேயும் கலே வடிவங்களேயும பாதுகாக்கவும் வளர்க்கவும

அன்றுட பாவனேக்கு ஏற்ற வகையில் கைபபணித திறமைகளே பயன்படுத்த ஊக்கமளிததல்

பாரம்பரிய மரபுவழியில் நவமான வடிவங்களே உருவாக்கலும் புதுமைகளேப் புகுத்தலும்

உற்பத்தி முறைகளில் தொழில்நுடப உத்திக்கான முன்னேற்றங்களே ஊக்குவித்தல்

கைப்பணியாளர்களின் சமூக அந்தஸ்தினே உயர்த்தலும் வருமானத்தை அதிகரித்தலும்

**கலா பவனம்**

ஆனந்த குமாரசாமி மாவத்தை கொழும்பு



தேசிய கைபபணி வாரம எமது கைபபணிகள் கைபபணித் திறன்கள் பற்றிப் பொதுமக்கள் மத்தியிலே விழிப புணர்ச்சியை ஏற படுத்து முகமாக சிறு கைத் தொழிற திணைக் களம், கைபபணிப பொருட சந்தைப படுத்தல் - ஏற்றுமதி ஊக்குவித்தல் திணைக்களம ஆகியவற்றின் தீவிர ஆதரவுடனும் ஒத்துழைபபுடனும எமது அமைச்சினுல் ஏற்பாடு செயயப படுகிறது. மரபுவழிக் கைப்பணிகளேயும் கலேத் திறன்களேயும் முதுசமாகக் கொண்டவர்கள் நாம். எமது பாரம்பரியத்தைப் பேணுவதானுல கைப்பணியாளர் தமது முழு ஆற்றலேயும வெளிப் படுத்த வாய்ப் பளிக்கும் வகையிலே அவர்களுக்குச் சமூக பண வெகுமதிகள் வழங்குதல் அத்தியாவசியம என்பதை உணர்ந்து அவர்களின் மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளேஎனது அமைச்சு மேற் கொண்டுவருகிறது. கைப்பணியாளர்களுக்கு வேண்டிய பொருள்களேயும் சேவைகளேயும் வழங்குதல், கைப்பணிப் பொருள்கள் தரச் சிறப்பிலும விற்பனே வாய்ப்பிலும் மேன்மை பெறச் செய்தல், வெளிநாடுகளில் அவற்றை விற்பனே செய்வதற்கான வழிவகைகளே வகுத்து, கைபபணியாளரின் வருமானம் பெருக வாய்ப்பேற் படுத்தல் ஆகியவற்றுக்கான நடவடிக்கைகளே அமைச்சு எடுத்துள்ளது. இவற்றை மேலும் விரிவுபடுத்து முகமாகவே கைப்பணி வாரம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

எஸ். தொண்டமான்
கிராமியத் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர்



கைபபணித்துறை பற்றி நாடு முழுவதிலும் சிரத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் "இலங்கைக் கைபபணி 80" என்னும் தேசிய கைபபணி வாரத்தினே எமது அமைச்சு ஏற்பாடு செயதுள்ளது

எமது கைபபணியாளாகள் ...து வேலேயின் தரச் சிறபபுக்கு உலகமுழுதும் பாராட்டுப் பெற்றிருக்கிறர்கள் ஆனுல் அவர்கள் இலங்கையிலும் உலகச் சந்தைகளிலும தமது பொருள்களேப பெருந்தொகையாக விறபனே செயவதறகு வாயபபாக மூலப பொருள்களே வழங்குவதில நாம அவர்களுக்கு உதவ வேணடியுள்ளது மேலும அவர்களின வாழகைத் தரமும சமூக அந்தஸ்தும உயருவதறகு பொதுமக்களின் ஆதரவு அவசியம

எமது கைபபணியாளர்கள் நமது ஆதரவுக்கு முற்றிலும தகுதியானவர்களே என்பதையும அவர்களின் பணி எமது சொந்த தனித்துவமான பண்பாடடின் ஊற்று மூலமாகக் கொண்டதென்பதையும் இக் கைபபணி வாரம் எமக்குப் புலபபடுத்துமென்பதில் சந்தேகமில்லே

கைப்பணி வாரம் வெற்றி பெறுவதாக.

எஸ் கே பியதாசா
கிராமியத் தொழில் துறை அபிவிருத்திப் பதில் அமைச்சர்



எமது கைப்பணிப் பொருள்களின் பாரம்பரியச் செழுமையை நாட்டு மக்களின் கவனத்திற்குக் கொண்டு வரும் நோக்கத்துடன இந்த அமைச்சு கைப்பணி வாரத்தினே ஏற்பாடு செய்கிறது. நாடு முழுவதிலுமுள்ள எமது கைப்பணியாளர்களின் மிகச் சிறந்த ஆக்கங்களேக் கொண்ட பொருட் காட்சி; கைப்பணியாளர்கள் தாமே கலந்து கொள்ளும் கருத்தரங்குகள், வானெலி நிகழ்ச்சிகள், திரைப்பட தொலேப்படக் காட்சிகள், தபால்துறை விசேஷ கூலோகம், மற்றும் விசேஷ தபால் உறை என்பனவற்றை வெளியிடல்; மேன்மை தங்கிய ஜனதிபதி அவர்கள் கைப்பணியாளர்களுக்கு விருதுகள் வழங்குதல் என்பன இவ்வாரக் கொண்டாட்டங்களில் அடங்கும். இவை யாவும் எமது கைப்பணிப் பொருள்கள் மீது பொதுமக்கள் கூடுதலான அக்கறையும் ஆர்வமும் கொள்ளத் தூண்டுகோலாக அமையுமெனவும் அதன் பயனுக கைப்பணியாளர்களின் வாழ்க்கை மேன்மையும் செழுமையும் அடையுமெனவும் நம்புகிறேம்.

கே. என். வீரக்கொடி
செயலாளர், கிராமியத் தொழிலதுறை அபிவிருத்தி அமைச்சு.

**சிறு கைத்தொழிற் திணைக்களம்**

**கைப்பணிப் பொருட் சந்தைப்படுத்தல்,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்த குமாரசாமி மாவத்தை கொழும்பு

கைப்பணியாளர்களின் சமூக அந்தஸ்தினை உயர்த்தலும் வருமானத்தை அதிகரித்தலும்

மேன்மையும் செழுமையும் அடையுமெனவும் நம்புகிறோம்.

கே. என். விரக்கொடி
செயலாளர், கிராமியத் தொழிலதுறை அபிவிருத்தி அமைச்சு.

## சிறு கைத்தொழிற்றிணைக்களம்

இலங்கையின் அபிவிருத்தி முயற்சிகளில் சிறு கைத்தொழிற்றிணைக்களம் முன்னணியில் திகழ்கிறது. தொடக்கத்தில் இத் திணைக்களம் தனது தொழிற்பாடுகளை பாரம்பரிய கைப்பணிப் பொருட் பிரிவுடன் நிறுத்திக்கொண்டது. எனினும், அரசாங்கத்தின் அண்மைக்கால முடிவின் பிரகாரம் சிறு கைத்தொழிற்றிணைக்களத்திற்கு சிறு கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யும் முழுப் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உடனடி அபிவிருத்திக்கென பல உற்பத்திப் பொருட்களை திணைக்களம் இனங்கண்டுள்ளது. திட்ட உருவாக்கங்கள் தயாரிக்கப்படுவதுடன் அவை மிக விரைவில் கிடைக்கப் பெறவுள்ளன. தனியார் துறை அபிவிருத்திக்கு இத்திணைக்களம் ஒரு தூண்டுகோலாய் அமைந்து நிற்கிறது. திட்ட உருவாக்கங்கள், கடன்கள், நிபுணத்துவ ஆலோசனைகள், ஒழுங்கமைந்த தரக் கட்டுப்பாடு, உறுதியான சந்தைப்படுத்தும் வசதிகள் ஆகிய இவ்வளவும் பொருந்திய பல்வேறு நன்மைகளை ஒரு தொழிற்துறை உரிமையாளர் பெறக்கூடியதாக இருக்கும். உள்ளூரில் கிடைக்கக் கூடிய மூலப் பொருட்களைக் கொண்டு உருவாக்கப்படும் பொருட்களின் அபிவிருத்தி இத்திணைக்களத்தின் முக்கிய கடமையாகும். இத்திணைக்களம் ஈடுபட்டுள்ள துறைகள் பின்வருமாறு:

1 அரசாங்கத் துறையில் பல்வேறு கைத்தொழில் நிலையங்களை அமைத்தல்.

2. திணைக்கள, கூட்டுறவு கைத்தொழில் வேலைக்களங்களையும் நிலையங்களையும் நிர்வகித்தல்.

3. கைத்தொழிலிலீடுபட்டுள்ளவர்களுக்கு அடிப்படை விபரங்களையும் தொழில்நுட்ப நிபுணத்துவ ஆலோசனைகளையும் உள்ளூரில் அரிதான மூலப் பொருள்களையும் வழங்குதல்.

4 அவர்களது உற்பத்திப் பொருட்களுக்கு உள்ளூர் வெளிநாட்டுச் சந்தை வாய்ப்புகளை பெற்றுக்கொடுத்தல்

5 பல்வேறு உள்ளூர்க் குடிசைக் கைத்தொழில்களுக்கும் கைப்பணித் தொழில்களுக்கும் சொந்த நிலையங்களை நடத்துதல். இது, தும்புவேலை, தச்சு வேலை, மட்பாண்டம் கலாவடிவ நெசவு, மர வேலைப்பாடு, அரக்குசாய வேலை, பிரம்பு வேலை, மூங்கில் வேலை, பன்ன வேலை, பாய், தலையணை, நேந்தை, சிறிய அளவிலான தோற்பொருட்கள், படடிக் ஆகியனவற்றை உள்ளடக்கும்.

6 தொழில் பயிலும் பணியாளர்களுக்கு திறமைபெற்ற கைப்பணியாளர்களின் சேவையினை பெற்றுக்கொடுக்க உதவி பெறும் கைத்தொழிற் பாடசாலைகளையும், பயிற்சி வகுப்புகளையும் நடத்துதல்

### கலாவடிவ நெசவுகள்

ஏறத்தாள மூவாயிரம் பெண்களுக்கு தொழில் வாய்ப்பினை அளிக்கும் 50 கலாவடிவ நெசவு நிலையங்கள் உள்ளன இக்கைத்தொழிலுக்கென தனியான அமைப்பு நிலையமொன்று அமைப்பதற்கான திட்டங்கள் தயாராகியுள்ளன கலாவடிவ நெசவு நிலையங்களில் நியமிக்கப்பட்ட பெண்களுக்கு பிரதேச அடிப்படையில் பயிற்சியளிக்க ஏற்பாடாகியுள்ளது கலாவடிவ நெசவுப் பொருட்களை கொண்ட ஒரு வெற்றிகரமான கண்காட்சி கொழும்பில் அண்மையில் நடத்தப்பட்டது.

### தும்பு நிலையங்கள்

பாரம்பரிய முறைகளின் மூலம் தயாரிப்பதற்கு ஏழு எட்டு மாதங்கள் எடுத்த வெண்தும்பு உற்பத்தி யந்திரமயமாக்கப்பட்டதன் பின் மூன்று மாதங்களில் தயாராகின்றது கட்டுநாயக்க, நீர்கொழும்பு ஆகிய இடங்களிலுள்ள தெங்குப் பொருள் உற்பத்தி நிறுவனங்கள் இவ்வாறு நாலாயிரத்து ஐநூறிலிருந்து 5000 தொன் வரை பெறக்கூடிய வெண்தும்பு தயாரிப்பில் ஏற்கனவே ஈடுபட்டுள்ளன

### தச்சுத் தொழில் வேலைக்களங்கள்

நாட்டுக்குத் தேவையான திறமைமிக்க தச்சுத் தொழிலாளர்களை இவை உருவாக்குகின்றன உள்ளூரில் தேவைப்படும் பல்வேறுவிதமான வீட்டுத் தேவைத் தளபாடங்களை இந்நிறுவனங்கள் தயாரிக்கின்றன சுதந்திர வர்த்தக வலயம் மகாவலி அபிவிருத்தி திட்டங்கள் போன்ற பாரிய திட்டங்களுக்கு ஆயிரக்கணக்கான தச்சுத் தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பெருந்தொகையான திறமை மிக்க தச்சுத் தொழிலாளர்கள் செல்வதால் இன்றைய பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது வருங்காலத் தேவையைச் சமாளிக்க இத்திணைக்களம் தச்சுத் தொழிற் பாடசாலைகளை நிறுவி பெருந்தொகையான தொழில் பயிலுநர்களுக்கு பயிற்சியளிக்கிறது.

### விசேட நிகம்ச்சித் திட்டங்கள்.

மஹரகமையில் சாயமூட்டும் நிலையமொன்றினை அமைப்பதன் மூலம் நவீன தொழில்நுட்ப உத்திகளைப் புகுத்துதல் தொழில் பயிலுநர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக வகுப்புகளை நடத்துதல். தனியார் துறையில் சிறு கைத்தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்தல்.



## கைப்பணிப் பொருட் சந்தைப்படுத்தல், ஏற்றுமதி ஊக்குவித்தல் திணைக்களம்

இப்புதிய திணைக்களம் உருவாக்கப்பட்டமை கைப்பணிப் பொருள்களின் விற்பனையிலும் ஏற்றுமதி மேம்பாட்டிலும் இன்றைய அரசாங்கம் எத்தகைய சிரத்தை கொண்டுள்ளதென்பதையும் உற்பத்தியிலிருந்து முற்றிலும் வேறுபட்ட சிறப்புத் துறையாக விற்பனை கணிக்கப்படுகின்றதென்பதையும் கைப்பணிப் பொருட்களின் உற்பத்தியையும் வடிவ அமைப்பையும் உள்ளூர் சந்தையினதும் வெளிநாட்டுச் சந்தைகளினதும் தேவைகளுக்கு இசைவாக்குவதற்கு அளிக்கும் முக்கியத்துவத்தையும் புலப்படுத்துகிறது

### கைப்பணியாளர்களுக்கு ஆற்றும் சேவைகள்

கைப்பணியாளர்களுக்கு கைமேல் பணம் வழங்குதல் நியாயமான விலைகளை உறுதிப்படுத்தல். கொள்வனவு ஸ்தலத்திலேயே தொழில் நுட்ப அறிவூட்டல். அரசாங்க மற்றும் தனியார் விற்பனை நிலையங்கள் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் மூலப்பொருள்களை வழங்குதல்

### அண்மைக்காலச் சாதனைகள் கொள்வனவுகளைப் பன்முகப்படுத்தியமை

கைப்பணி நடவடிக்கை நடைபெறும் கேந்திர ஸ்தானத்திலேயே கொள்வனவு நிலையங்களை நிறுவியதும் ஒரு புதுமையான நடவடிக்கையாகும் நகரத்து மத்திய நிலையங்களுக்கு கைப்பணியாளர்கள் கால் கடுக்கச் செல்லும் நிலை மாறி, கொள்வனவுச் சபையினர் இன்று கைப்பணி நிலையங்களை நாடிச் செல்கின்றனர்.

### லக்சல நிலையங்களுக்கு கைப்பணிப் பொருட்களை வழங்குநர்களைப் பதிவு செய்தல் இலகுவாக்கியமை

கிராமியத் தொழிற்துறை அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு எஸ். தொண்டமான் அவர்களின் பணிப்பின் பேரில் லக்சல நிலையத்துக்குக் கைப்பணிப் பொருட்களை வழங்குவோரைப் பதிவு செய்வதற்கான கட்டுப்பாட்டு நடைமுறைகள் தளர்த்தப்பட்டன உண்மையான கைப்பணியாளர் எவரும் சமாதான நீதவான் ஒருவரின் விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து இப்பொழுது தம்மைப் பதிவு செய்து கொள்ளலாம்.

### இலங்கையில் பொருட்காட்சிகளில் பங்கு பற்றியமை

பொருட்காட்சிகளும் விற்பனைகளும் அவ்வப்போது நாட்டின் பல்வேறு பாகங்களிலும் நடத்தப்பட்ட போதிலும், சந்தைப்படுத்தும் முயற்சியானது இப்பொழுது முன்னெரு போதுமில்லாத தீவிரத்துடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம் முயற்சி, உறங்கம, நிவித்திகல, நாவலப்பிட்டி, கம்பஹா கல்கமுவ ஆகிய இடங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டது சமய விழாக்கள், களியாட்டங்கள் போன்றவற்றில் சேவை ஆற்றுவதற்கெனச் சஞ்சார லக்சல அமைப்பொன்று இப்பொழுது இயங்க வருகின்றது. புதிய வெகுஜன ஆதரவு பெற்ற கிராமப் புனருத்தாரண திட்டம் போன்றவை ஆரம்பிக்கப்பட்டதால் இத்தகைய சஞ்சார லக்சல நிலையங்கள் சிவனொளிபாதமலை போன்ற சிகரங்களுக்கும், கதிர்காமம் போன்ற தொலை இடங்களுக்கும் அண்மையிலுள்ள மொரட்டுவைக்கும் சஞ்சாரம் செய்து வருகின்றன

### ஏற்றுமதி நடவடிக்கையின் விஸ்தரிப்பு

1979ல் இத்திணைக்களம் வெளிநாடுகளில் நடைபெற்ற ஆறு பொருட்காட்சிகளிலும் சந்தைகளிலும் பங்கு பற்றியது. யூகோஸ்லாவியாவுக்கு 50,000 அமெரிக்க டொலர் பெறுமானமுள்ள ஏற்றுமதி தொடர்பான பேச்சுவார்த்தைகள் முடிவாக்கப்பட்டதுடன் பெரும்பாலும் மேற்கு ஐரோப்பிய பிரதேசத்துள் முடங்கிக் கிடந்த கைப்பணி வர்த்தகம் போல்கன் பிரதேசத்திலும் காலூன்றிவிட்டது.

### விற்பனைகள்

1954க்கும் 1965க்கும் இடையில் நடைபெற்ற விற்பனையின் பெறுமதி ரூபா 26, 43, 208/- ஆகும். இப்பொழுது தொகை ரூபா 25, 09, 757/- ஆக அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டில் நடைபெற்ற வெளிநாட்டு நாணய விற்பனைகளின் பெறுமதி ரூ. 26, 08, 261 16 ஆகும்

### எதிர்காலத் திட்டங்களும் நடவடிக்கைகளும்

கைப்பணியாளர்களைப் பிரதேச அடிப்படையில் இணைத்து, பிரதேச கைப்பணியாளர் சங்கங்களில் அவர்களுக்கு இணைப்பு அங்கத்துவம் அளித்தல் லக்சல நிறுவனத்தின் உத்தரவாதத்தின் பேரில் கைப்பணியாளர்களுக்கு வர்த்தக வங்கிகள் மூலம் கடன் வசதி ஏற்பாடு செய்தல், ஏக சீரான தரச் சிறப்பை உறுதிப்படுத்தும் பொருட்டுப் பெரிய ஏற்றுமதி ஓடர்களைத் தனியொரு கைப்பணியாளருக்கு அல்லது தனியொரு கைப்பணியாளர் சங்கங்களுக்கு நெறிப்படுத்துதல் பெரும் கிராக்கியுள்ள கைப்பணிப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு அவசியமான புதிய வடிவங்களையும் தொழில் நுட்ப அறிவையும் கைப்பணியாளர் பெற வாய்ப்பளிக்கும் விற்பனை சார்பான டிசைன் நிலையம் ஒன்றை அமைத்தல் இலாப எல்லையை ஒடுக்கும் வேளையில் கைப்பணியாளர்களுக்கு நல்ல விலை கிடைக்கும் வகையில் விலை நிர்ணயக் கட்டுக்கோப்பை மாற்றுதல் கொள்வனவைப் பன்முகப்படுத்தும் திட்டத்தைக் காலி - மாத்தறை, கேகாலை — குருநாகல் மட்டக்களப்பு — யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு விஸ்தரித்தல்

VASHICARA

# கிராமியத் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சு

# "அஸாம் கிளர்ச்சியை உடன் நிறுத்தவும்"

## எதிர்க்கட்சிகள் கூட்டாகவேண்டு கோள்

புதுடில்லி, ஜூன் 1

அஸாம் கிளர்ச்சியை உடன் நிறுத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில்வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அஸாம் பிரச்சினை தொடர்பாக பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூட்டியிருந்த அரசியல் கட்சிகளின் கூட்டத்தின் பின்னரே எதிர்க்கட்சித் தலைவர்கள் இந்த கூட்டு அறிக்கையை வெளியிட்டனர்.

அஸாமில் இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைப் பேச்சுவார்த்தையின் மூலமே தீர்க்கலாம். எனவே பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏற்ற வகையில் கிளர்ச்சியாளர்கள் குறிப்பாக மாணவர்கள் தமது கிளர்ச்சி நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ள வேண்டும்" என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற அரசியல் கட்சிக் கூட்டத்தின்போது பிரதமர் திருமதி இந்திரா காந்தி பேசுகையில் அஸாம் கிளர்ச்சி தேச விரோதமானது என்றும் இதனை எதிர்க்கட்சிகள் ஆதரிக்கின்றன என்றும் வெளிவந்த செய்திகள் தவறானவை என்றும் சுட்டிக்காட்டினார். (கு)

# சர்வதேச நெருக்கடிகள்: அணிசேரா நாடுகள் ஆராயும்!

ஹவானா, ஜூன் 1

சர்வதேச நெருக்கடிகள் தொடர்பாக ஆராயும் பொருட்டு அணிசேரா நாடுகளின் விசேஷ கூட்டம் ஒன்றினை கியூபா கூட்டியுள்ளது.

அணிசேரா நாடுகளின் அமைச்சர்கள் மட்டத்திலான இக்கூட்டம் ஹவானாவில் ஜூலை முதல் வாரத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் எந்தெந்த விடயங்கள் தொடர்பாக ஆராயப்படும் என்று தெரிவிக்கப் படவில்லையாயினும் இன்றைய சர்வதேச நெருக்கடிகளுக்கான தீர்வுகுறித்து முக்கியமாக ஆராயப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியனின் தலையீடு குறித்து அணிசேரா நாடுகள் பலவித கருத்து வெளியிட்டு வருவதால் இப்பிரச்சினையே முக்கிய இடத்தைப்பெறும் என்று அரசியல் அவதானிகள் கருத்துவெளியிட்டுள்ளனர். (கு)

# 'இலங்கையில் தமிழ்நாட்டார் வழக்கியல்' கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் கணபதிப்பிள்ளை நினைவாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் ஆதரவில் இலங்கையில் தமிழ் நாட்டார் வழக்கியல் பற்றிய இருநாள் கருத்தரங்கு இம் மாதம் 13, 14ம் திகதிகளில் நடைபெற உள்ளது.

இலங்கை, இந்தியப் பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த பேராசிரியர்களும் ஆய்வாளர்களும் தமிழ் நாட்டார் வழக்கியல் பற்றிய ஆழமான ஆய்வுக் கட்டுரைகளை இக் கருத்தரங்களில் சமர்ப்பிக்க உள்ளனர். ஈழத்திலே தமிழ் நாட்டார் வழக்கியலுடன் தொடர்புடைய ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் பலரும் கருத்தரங்குக் கட்டுரைகள் தொடர்பான கலந்துரையாடல்களில் பங்கு கொண்டு கருத்துரை வழங்க இசைந்துள்ளனர்.

கோட்பாடுகளும் ஆய்வு நெறிகளும், சமூகப் பரிமாணங்கள்.

(2-ம் பக்கம் பார்க்க)

# தேர்தல் கலவரங்களில் 28 பேர் பலி; வேட்பாளர் 6

புதுடில்லி, ஜூன். 1

பீஹார் மாநிலத்தில் நேற்றைய வாக்களிப்பின்போது போது ஏற்பட்ட மோதலில் 4 பேர் கொலைசெய்யப் பட்டுள்ளனர்.

என்பது மாநில தேர்தலை ஒட்டி இதுவரை இடம் பெற்ற கலவரங்களில் இதுவரை 6 வேட்பாளர்கள் உட்பட 28 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். (கு)

# ரூ. 18 ஆயிரம் திருட்டு நகைகள் மீட்பு!

## ஒருவர் றிமாண்டில்; 4பேருக்குப் பிணை

(யாழ்ப்பாணம்)

நகைக் கடை ஒன்றில் திருடப்பட்டதாக கூறப்படும் 18 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த வெள்ளி நகைகள், நகைகளுக்குப் பதிக்கும் கல்வகைகள் ஆகியன மீட்கப்பட்டதுடன், பொருட்களைத் திருடியதாக கூறப்படும் இளைஞர் ஒருவரும் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ். கஸ்தூரியார் வீதியிலுள்ள நகைக் கடை உரிமையாளர் ஒருவர் தமது நகைக் கடையில் திருடப்பட்டுள்ளதாகப் பொலிஸில் புகார் செய்தார்.

யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த புலன் விசாரணை பகுதி பொலிஸ் கான்ஸ்டபிள்களான திரு. எஸ். குணரத்தினம், திரு ரத்னாயக்கா ஆகியோர் மேற்படி நகைக் கடையில் வேலை செய்து வந்த ஜெயக்குமார் என்பவரைச் சந்தேகத்தின் மீது கைது செய்து விசாரணை செய்த போது குறிப்பிட்ட நகைக் கடையில் உள்ள பொருட்களைத் தாமே திருடியதாகவும், திருடப்பட்ட பொருட்கள் அனைத்தையும் முசாலீம், கிருஷ்ணகுமார், வேல் முருகன், காதர் ஆகியோரிடம் கொடுத்ததாகவும் தெரிவித்தாராம்.

பொலிசார் சந்தேக நபரால் கூறப்பட்ட நால்வரையும் கைது செய்ததுடன் திருடப்பட்டதாகக் கூறப்படும் பொருட்களையும் கைப்பற்றினர்.

சந்தேக நபர்கள் ஐந்து பேரையும், யாழ். நீதிமன்றத்தில் நீதவான் திரு. ரீ யோகநாதன் முன்னிலையில் ஆஜர் செய்த போது முதலாவது சந்தேக நபரான ஜெயக்குமாரை றிமாண்டில் வைக்கும் படியும், ஏனையோரை 10 ஆயிரம் ரூபா பிணையில் செல்லும் படியும் நீதவான் உத்தரவிட்டார். (கொ. இ)

# யாருடைய லைசென்ஸ்?

மோட்டார் சைக்கிள் லைசென்சும் இன்சூரன்ஸ் பத்திரமும் யாழ். நாவலர் வீதியில் வைமன் வீதிச் சந்திக்கு அண்மையில நல்லூர் குமார வீதியைச் சேர்ந்த திரு. ஐ. கார்த்திகேசு என்பவரினால் கண்டெடுக்கப்பட்டு "ஈழநாடு" காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கு உரியவர்கள் காரியாலய நேரத்தில் வந்துபெற்றுக் கொள்ளலாம் (அ)

# ஊழியர்மீது கொலை முயற்சி வழக்கு

(மாவிட்டபுரம்)


புகையிரதப்பகுதி ஊழியர் ஒருவரை சக ஊழியர்ஒருவர் பொல்லால் தாக்கி கொலை செய்ய எத்தனித்தாராம். அவர் மீது மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது

காங்கேசன் துறையிலுள்ள புகையிரதப்பகுதி விடுதியில் வசிக்கும் ஆர் ஏ. ஜே. பெரேரா என்னும் புகையிரதப்பகுதி தொழிலாளியை அதே விடுதியில் வசிக்கும் புகையிரதப் பகுதி டிக்கட் பரிசோதகரான

(2-ம் பக்கம் பார்க்க)


முழுக்குடும்பத்துக்கும் ஏற்ற போஷாக்கு நிறைந்த பானம்...

KLIM




"க்ளிம்" பிரசித்தி பெற்ற பால்மா உற்பத்தியாளர்களான அயர்லாந்து, போர்டன் கம்பனி லிமிடெட் ஸ்தாபனத்தாரால், விட்டமின் A & D நிறைந்த 28% வெண்ணை, கொழுப்புச் சேர்த்து உலகத்திலேயே முதன் முதலாகத் தயாரிக்கப்பட்ட பால்மா. "க்ளிம்" சுவை நிறைந்தது. நீண்ட காலம் பத்திரப்படுத்தக்கூடியதும், சுகாதாரத்திற்கேற்ப பதப்படுத்தப் பட்ட தன்மையும் கொண்டது.

கவர்ச்சியான ரின்களில் எவரும் வாங்கக் கூடிய விலையில் கிடைக்கிறது.

பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களிலும், முன்னணி வியாபாரிகளிடமும் பெறலாம்.

விலை ரூபா 16-50

மார்க்பெட்

ஸ்ரீலங்கா கூட்டுறவுச் சந்தைப்படுத்தும் சம்மேளனம், (ம. ப.)
127, இறுன்பாஸ் ரோட், கொழும்பு-14.
தொலைபேசி: 24961-3-5.


# சிறந்த பஸ் நடத்துநர் சாரதி தெரிவுப் போட்டி-80

கடமை, கண்ணியம் கட்டுப்பாடு ஆகிய நற்பண்புகளை பஸ் நடத்துநரிடமும் ஒழுக்கம், அவதானம் திறமை ஆகிய நற்பண்புகளை பஸ் சாரதிகளிடமும் வளர்க்கும் வண்ணம் யாழ் ரோட்டறிக் கழகம்

"சிறந்த நடாத்துநர், சிறந்த சாரதி" போட்டியை

இலங்கை வடபிராந்திய போக்குவரத்துச்சபையுடனும் "ஈழநாடு" பத்திரிகையுடனும் இணைந்து நடாத்த எண்ணியுள்ளது. இம்முறை வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஏழு டிப்போக்களையும் உள்ளடக்கிப் போட்டி நடாத்தப்படுகிறது.

இந்த டிப்போக்களிலிருந்து செயற்படும் பஸ் வண்டிகளில் கடமையாற்றும் சிறந்த சாரதிகளையும் நடத்துநரையும் தெரிவு செய்ய உதவும் வண்ணம் "ஈழநாடு" பத்திரிகையில் முதல் பிரசுரிக்கப்படும் கூப்பன்களை நிரப்பி அனுப்பும் படி யாழ். ரோட்டறிக் கழகம் பஸ் பிரயாணிகளை அன்புடன் கோருகிறது.

கீழே தரப்படும் கூப்பனைக் கத்தரித்து நிரப்பி அனுப்பவேண்டிய முகவரி:

ரோட்டேறியன் பல்வைத்தியகலாநிதி
பா. சோ. பாரதி
தலைவர் - தொழிற்சேவை பகுதி
பல் வைத்திய நிலையம்,
566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சிறந்த பஸ் நடத்துநர்-சாரதி தெரிவுப் போட்டிக் கூப்பன்

சிறந்த நடத்துநர் பெயர் ........................ சிறந்த சாரதி பெயர் ........................

டிப்போ :- யாழ்ப்பாணம்-காரைநகர்-பருத்தித்துறை-கிளிநொச்சி-முல்லைத்தீவு-மன்னார்-வவுனியா

[தங்கள் தெரிவுசெய்யப்பட்டவர் கடமையாற்றும் டிப்போவின் கீழ் கீறிடுக]

பஸ் செல்லும் வழி இலக்கம் (Route No...............)

அனுப்புபவர் பெயர்........................ஒப்பம்...........

விலாசம்..............................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெஸ்லி** மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்-லதா நடித்த
**நீதிக்கு தலைவணங்கு**
(புதிய பிரதி)

**ஹரன்** வட்டுக்கோட்டை
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்-சரோஜாதேவி
**என் கடமை**
(புதிய பிரதி)

**மனோஹரா** A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன்
விஜயகுமாரி
**அமுதா**
From 4th
BLAZING FLOWERS

குறிப்பிட்ட சிலதினங்கள் மட்டுமே காண்பிக்கப்படும்.
**ராஜா** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - லதா - மஞ்சுளா
**உலகம் சுற்றும் வாலிபன்**
(ஈஸ்மன் கலர்)
அரிய சந்தர்ப்பம்! யாழ்ப்பாண மக்களுக்கு இதுவே கடைசி வாய்ப்பு காணத்தவறாதீர்கள்

வெற்றிகரமான 16-வதுவாரம்
**வின்ஸர்** [யாழ்ப்பாணம்]
தொலைபேசி 466
தினசரி 5 காட்சிகள்
தினசரி: 10-30, 1-30 4-30 7-00 10-00
சுதாகர் - ராதிகா விஜயன் - ரதி
மற்றும் பலர் நடித்த
**நிறம் மாறாத பூக்கள்**
(வண்ணப்படம்)

**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30 6-30, 9-30
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
நடித்த
**பணக்காரக் குடும்பம்**
6-6-80 முதல் **ஆறிலிருந்து அறுபதுவரை**

**லிடோ** (காங்கேசன்துறை வீதி) போன் 7894
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி-லதா
**ஞானக்குழந்தை**

வெற்றிகரமான 7-வது வாரம்
**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
ஜெயசங்கர்-அசோகன்-நாகேஷ்-ராதிகா-ஜெயச்சந்திரன் ராமலிங்கம்-டிங்கிரி சிவகுரநாதன்- V. R. ஸ்ரீநடராசா
**ரத்தத்தின் ரத்தமே**
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்ஷன்: ஜோ தேவ் ஆனந்த்

5-வது ஜனத்திரள் வாரம்
**ராணி** (யாழ்நகர்)
தினசரி 5 காட்சிகள்
10-30. 1-30, 4-15, 7-00, & 9-45
★ கமலஹாசன் (இருவேடங்களில்)
★ ஸ்ரீதேவி மற்றும் பலர் நடித்த
**கல்யாண ராமன்** (கலர்)
குறிப்பு: மின்வெட்டு அமுலாகியுள்ள வேளைகளிலும் தடைகள் எதுவுமின்றி தொடர்ந்து காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன.

**SANTHI** JAFFNA Phone 7642
Daily 10-30 a.m., 2-30 4-45 7-00 & 9-45 P.m.
2-nd Crowded Week
CORNEL WILDE—YAPHET KOTTO
**'SHARKS TREASURE'**
—SUSPENSE — THRILLER — COLOR—
ALSO SHOWING! Colombo Schools Cricket Match
Schools Please Contact Management For Special Shows
NEXT: 'Clint Eastwood "THE EIGER SANCTION" (Color)


# "ஒப்பந்தங்கள் சிதைந்தது காங்கிரஸ் காரணமா?

## அரசியல்ஞானமின்மை ஆற்றலின்மை மூடிமறைத்தது காரணம்"

### அமிர் அறிக்கைக்கு குமார் பதில்

(யாழ்ப்பாணம்)

**"நாட்டில் என்ன நடக்கிறது என்று அறிய உரிமையுடைய மக்கள் அறியாதவகையில் மூடிமறைத்து பண்டாரநாயக்கா - செல்வநாயகம், டட்லி - செல்வநாயகம் ஒப்பந்தங்கள், இருகட்சிகளின் தலைவர்கள் தமக்குள் ஒத்துழைப்பதற்காக இரகசியமாகச் செய்து கொண்ட அரசியல் ஞானமற்ற செயலும் தமிழரசுக்கு முதலிடம் என்று தமிழரசுக் கட்சியினர் டாங்கியமையுமே ஒப்பந்த அழிவுக்குக் காரணம்' என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.**

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு அ. அமிர்தலிங்கம் சென்ற 24ந் திகதி விடுத்த அறிக்கையில் தமிழ்க்காங்கிரஸ் பற்றிக் குறிப்பிட்டிருந்ததற்குப் பதிலளிக்குமுகமாகவே திரு. குமார் பொன்னம்பலம் இவ்வறிக்கையை விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரான திரு அ. அமிர்தலிங்கம் 24 5-80-ல் பத்திரிகைகளில் வெளியிட்டுள்ள அறிக்கையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசைப் பற்றியும் விமர்சித்துள்ளமையால் இவ்வறிக்கையை விடுக்கவேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

கடந்த கால் நூற்றாண்டு காலமாக ஒற்றுமையின் பேரால் ஏமாந்த தமிழினம் அமிர்தலிங்கம் அணியினரைத் திரும்பத் திரும்ப ஆதரித்துப் பெரும்பலத்துடன் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வந்துள்ளது. கண்டது என்ன? பெரும் பலத்துடன் பாராளுமன்றம் சென்ற தமிழரசுக்கட்சியினரும் அது அழிந்த பின்னர் இன்று பாராளுமன்றத்தில் உள்ள கூட்டணியினரும் போராட்டங்களைக் கைவிட்டுச் சிங்களத் தலைவர்களுடன் விளையாடிய அரசியல் சூதாட்டத்தில் இனத்தைக் காட்டிக் கொடுத்தனரே தவிர வெற்றி பெறவில்லை. தங்களுடைய ஆற்றலின்மையால் அரசியல் ஞானமற்ற செயல்களால் ஏற்பட்ட தோல்விகளுக்கு அமிர்தலிங்கம் தமிழ்க் காங்கிரசைக் குறைகூறுவது முறையாகா; நேர்மையுமாகாது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியைப் புதிய தமிழ்க் காங்கிரஸ் கட்சி என்று கட்சிகளைவிட்டுச்சிவ சிதம்பரத்துடன் புதிதாகக் கூட்டணி அமைத்திருக்கும் அமிர்தலிங்கம் வர்ணித்திருக்கிறார். இந்தப்புதிய காங்கிரசைக் கைப்பற்றவா சிவசிதம்பரமும் வேறு இருவரும் எமக்கு எதிராக யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து தாங்களே அக்கட்சியின் முக்கிய உத்தியோகஸ்தர்கள் என்று வாதிட்டார்கள். தமிழ்க்காங்கிரசின் மாநாட்டைத் தடைசெய்வதற்காகவா இடைக்காலத் தடையுத்தரவு கோரி வாதாடி நீதிமன்றத்திற்கு அதி முக்கியமான விடயங்கள் தாக்கல் செய்யவில்லை என்ற காரணத்தின் நிமித்தம் படுதோல்வி அடைந்தார்கள். புதிய தமிழ்க்காங்கிரஸ் என்று சிவசிதம்பரம் போன்ற கட்சிக்குத் துரோகம் இழைத்தவர்களை வெளியேற்றிப் புனரமைப்புச் செய்யப்பட்டு புத்துயிர் பெற்று இயங்குகின்றது என்ற கருத்தில் தான் முன்னைநாள் தமிழரசு வாதி அமிர்தலிங்கம் சொல்கிறார் போலும்.


**நாகம்ஸ்** [சுன்னாகம்]
தினசரி 6-45, 9-45
ராமன் தேடிய சீதை
(புதிய பிரதி)


## எவ்வித நியாயமும் இடையாது

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் எதிர்ப்பு பண்டாரநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தத்திற்கும், டட்லி-செல்வநாயகம் ஒப்பந்தத்தின்கீழ் உருவாக இருந்த மாவட்ட சபைகளுக்கும் அனர்த்தத்தை விளைவித்தது என்று அமிர்தலிங்கம் கூறும் கூற்றில் எந்தவிதமான நியாயமும் இடையாது. பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் தமிழ் மக்களைக் காட்டிக் கொடுத்த ஒப்பந்தம் என்பதால்தான் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் அதனை எதிர்த்தது. சிங்களமே அரசகரும மொழி என்பதில் மாற்றம் செய்யமுடியாது என்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் நிபந்தனையை ஏற்றுக்கொண்டுசெய்யப்பட்ட உடன்படிக்கை தமிழினத்தை ஏமாற்றுவதற்காகச் செய்யப்பட்ட அரசியல் சூழ்ச்சியென்பதால் அதனைத் தமிழ்க் காங்கிரஸ் எதிர்த்து அம்பலப்படுத்தியது. மலையகத் தமிழரின் குடியுரிமைக்காக நீலிக் கண்ணீர் வடித்தவர்கள் இவ்வொப்பந்தத்தின் மூலம் அவர்கள் பிரச்சினையைத்தீர்க்க முனையவில்லை! அவர்களைக் கைவிட்டார்கள்.

## தமிழ்க்காங்கிரஸ் எதிர்த்தது ஏன்?

மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. வடகிழக்கு மாகாணங்கள் தமிழ் பிரதேசம் பறிபோகாது பாதுகாக்கப்படுவதற்கான ஏற்பாடு எதுவும் இவ்வொப்பந்தத்தில்இல்லை இதன் காரணமாகவே அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் அதனை எதிர்த்தது. இதற்கும் மேலாக அரசாங்கத்தோடு ஒத்துழைப்பதற்காக ஒப்பந்தம் செய்த தமிழரசுக் கட்சியினர் உண்மை நிலையைத் திரித்துப் புதிய காரணத்தாலும், தமிழரசுக்கும் முதலிடம் என்று பிரசாரம் செய்ததாலும் ஒப்பந்தத்திற்குத் தவறான விளக்கம் தந்ததாலும் தான் சிங்கள மக்கள் மத்தியில் எதிர்ப்பு வளர்ந்தது. அந்த எதிர்ப்பைத் தணிப்பதற்காக, ஒப்பந்தத்தை நிறைவேற்ற வசதி செய்வதற்காக ஒப்பந்தத்தின் மூலம் தமிழினத்தைச் செல்வநாயகமும் அவரது கட்சியினரும் காட்டிக்கொடுத்துவிட்டனர் என்பதற்கு எமது கட்சியின் தலைவர் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் சுட்டிய நியாயங்களைத் துண்டுப் பிரசுரமாக அடித்து அரசு நிகழ்ச்செலவில் பண்டாரநாயக்கா விநியோகித்தார் என்பதையும் அமிர்தலிங்கம் மறந்துவிட்டாரா?

தமிழரசுக்கட்சியின் ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் மனச்சாட்சியின் கட்டளைப்படி அமிர்தலிங்கம் பண்டாரநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தத்தை எதிர்த்து வாதாடினார். இதனை அவரே பகிரங்கமாகப் பத்திரிகை அறிக்கையில் ஒப்புக்கொண்டுள்ளார் ஒரே அணியில் இருந்த அமிர்தலிங்கத்தாலேயே எதிர்க்கப்பட்ட துரோக ஒப்பந்தத்தைப் பற்றி எதிரணி ஒன்று இருந்த காரணத்தால்தான் தமிழினத்துக்கு அறியக்கூடியதாக இருந்தது இனத்தைவிற்று இலட்சியத்தை விட்டு இயக்கத்தை நேசித்த காரணத்தால் மனச்சாட்சிக்கு எதிராக அமிர்தலிங்கத்தால் இவ்வொப்பந்தம் பின்னர் ஆதரிக்கப்பட்டிருக்கலாம். ஏனையோரும் அதேபோல மனச்சாட்சியை விட இச்செயல்பட வேண்டும் என்று அமிர்தலிங்கம் எதிர்பார்க்கலாகாது. பண்டாரநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தத்திற்கு எதிராகக் கண்டிக்குப் பாதயாத்திரை சென்ற ஜே. ஆர், இனவாதத்தை அவர்களை ஒருமுறை தமிழரசுக்கட்சியை நடாத்த மகாநாட்டுக்கு, யாழ்ப்பாணத்தில் இருந்து மாவிட்டபுரம்வரை தாம் இழுத்து சுவீறட்டி, இழுத்துச் சென்றவர்கள் தமிழரசுக் கட்சியினரே என்பதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

## பல்கலைக்கழகத்தில் ஜி. ஜி. கனவு பலித்தது

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டும் என்னும் அமரர் ஜி ஜி யின் கனவு இன்று நிறைவேறியிருக்கிறது. இப்பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் அமைவதை எதிர்த்துத் திருகோணமலையில் நிறுவப்பட வேண்டும் என்று முரண்டு பிடித்த 1970 ம் ஆண்டுக்கு முன் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படும் நிலைக்குச் சீர்குலைத்தவர்கள் அன்றைய தமிழரசுக்கட்சியினரே. இன்றைக்கு திருகோணமலையில் பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டும் என்ற இவர்களின் கோரிக்கை எங்கே குப்பைத்தொட்டிக்குள் கிடக்கிறது? தமிழ்க் காங்கிரஸ் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் கோருகிறது என்பதற்காக அந்த நல்ல முயற்சியைக் குழப்பியடித்த அமிர்தலிங்கமும் அவர்கள் அணியினரும் அரசியலில் இருந்து ஒதுக்கப்படும்போதுதான் தமிழினத்திற்கு நல்ல காலம் பிறக்கும்

அரசியல் சதுரங்கத்தில் அற்புதமாகக் காய்களை நகர்த்திய காங்கிரஸ் தலைவர் ஜீ ஜீ. பொன்னம்பலம் அமைச்சராக இருந்தபொழுது செல்வநாயகமும் அவரது கட்சியினரும் அவரைக் கடுமையாக எதிர்த்தனர் இருந்தபொழுதிலும் அவர்களது எதிர்ப்புக்கு மதிப்

(2-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மத்தியகல்லூரி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களின் பாடசாலைப் பகிஷ்கரிப்பு சம்பந்தமாகவும் உண்ணாவிரதம் சம்பந்தமாகவும் எமது நிருபர் பாடசாலை நிர்வாகத்துடன் தொடர்புகொண்டபோது மேற்படி மாணவர்கள் பாடசாலையின் நிர்வாகத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளாததும், தப்பபிப்பிராயமும், வதந்திகளும்தான் இவ்வித நிலைதோன்றியுள்ளமைக்கு மேற்படி பாடசாலையில் 4 ஆசிரியர்கள் உபரியாக இருந்ததினால் இரு ஆசிரியர்களே இடமாற்றம் செய்யப்பட்டனர் என்றும் மற்றும் இரு ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என்றும் பதிலளிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி கல்லூரி நிர்வாகம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையிலிருந்து நாங்கோர் செல்லவிருக்கும் உதைபந்தாட்டக்கோஷ்டிக்கு இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள பாடசாலைகளிலிருந்தும் திறமைமிக்க மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்குக் கொழும்பில் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பாடசாலையில் இருந்தும் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு கொழும்பிற்கு அனுப்பப்பட்டு பரீட்சைகள் நடத்தப்பட்டன. அப்படியிருந்தும் அக்கோஷ்டி பாங்கொக் செல்வதற்கு முடிவு செய்யப்படவில்லை.

இது தொடர்பாக இதற்குப் பொறுப்பான உதைபந்தாட்டச் சங்கம் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு கல்லூரிக்கும் இது பற்றி அறிவிப்பதாகவும் உறுதியளித்திருந்தது. ஆனால் இதுவரை அதிபருக்கு தெரிவுகள் பற்றித் தெரிவிக்கப்படவில்லை. மாணவர் தெரிவுசெய்யப்பட்டால் நிச்சயம் பாங்கொக் செல்லும் தெரிவுக்கோஷ்டியுடன் செல்வதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்படும். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இந்த மாணவர் தடுத்துநிறுத்தப்படவில்லை. வீணாகப் பரப்பப்பட்டுள்ள வதந்தியில் எவ்வித உண்மையுமில்லை.

[கோ-இ]

## ஒப்பந்தங்கள்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

களால் கைவிடப்பட்டுக் காட்டிக் கொடுக்கப்பட்டதே தவிர இழந்த உரிமைகளில் எதையாவது மீட்கவில்லை. தமிழினம் சுதந்திரத்தினை இன்று இழந்து தவிக்கின்றது என்றால் அதற்குக் காரணம் தமிழினம் ஒற்றுமைப்பட்டுத் தமிழ்க் காங்கிரசைக் கடந்த காலங்களில் ஆதரிக்கத் தவறியமையேயாகும். இதுவரை காலமும் கோர்ணல் அமிர்தலிங்கம் அணியினரைத் தமிழினம் ஆதரித்துக் கண்டது ஒன்றுமில்லை. ஆகவே தமிழினம் ஒற்றுமைப்பட்டுத் தமிழ்க் காங்கிரசை ஆதரிக்க வேண்டும். சுதந்திரத்தினை அடைய அதுவே வழி;

## ராஜரத்தினம் சிங்கப்பூரின் துணைப்பிரதமர்

சிங்கப்பூர், ஜூன் 1

சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் திரு. சின்னத்தம்பி இராஜரத்தினம் சிங்கப்பூரின் இரண்டாவது துணைப் பிரதமமந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

துணைப் பிரதமர் பதவியுடன் அவர் தொடர்ந்து வெளிவிவகார அமைச்சராகவும் பணியாற்றுவார். (இ)

## மரண அறிவித்தல்

### திருமதி மீனாட்சி பொன்னையா

(உரிமையாளர் சுன்னாகம்தனலட்சுமி புத்தகசாலை)

காலஞ்சென்ற ஈழகேசரி பொன்னையாவின் அருமை மனைவி திருமதி மீனாட்சி காலமானார். இவர் திருமதி புனிதம் பசுபதியின் அன்புத் தாயாரும், சட்டமா அதிபர் திரு. சிவா பசுபதியின் அன்பு மாமியாரும், திருமதி சிவானந்தி ஆனந்த கிருஷ்ணன், அஜன் இவாஜி, சிவாஞ்சலி ஆகியோரின் பேத்தியும், மூ. சபாரத்தினத்தின் (சுன்னாகம் தனலட்சுமி புத்தகசாலை) சிறியதாயாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நாளை (3-6-80) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு குரும்பசிட்டியில் உள்ள அவரின் இல்லத்திலிருந்து குரும்பசிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

5937

## மரண அறிவித்தல்

### சச்சிதானந்தம்

தாவடி சிவக்கொழுந்து சச்சிதானந்தம் ஜெர்மனியில் காலமாகிவிட்டார். இவர் சிவக்கொழுந்து தம்பதிகளின் புதல்வனும், அன்னலட்சுமி ஆசிரியர் சைவத் தமிழ் கலவன் பாடசாலை கோண்டாவில், சரஸ்வதி நைஜீரியா, கமலேஸ்வரி, பரமேஸ்வரி ஆசிரியை கொக்குவில் இந்துக் கல்லூரி, இராஜேஸ்வரி, தவமலர், டாக்டர் கிராம சபை உடுவில், செல்வரட்ணம் உடுவில் கிராமசபை, ஆனந்த கிருஷ்ணன், தருமராசா, செல்வராசா கிழக்கிலங்கை கதிதாசிக் கூட்டுத்தாபனம் ஆகியோரின் சகோதரரும், தம்பிராசா ஆசிரியர் சைவத்தமிழ் கலவன் பாடசாலை கோண்டாவில், இராசரட்ணம் நைஜீரியா, ஜெகராசசிங்கம் கணக்காளர் நார் ஆனி ஒட்டுத் தொழிற்சாலை, சண்முகரட்ணம் ஆசிரியர் சென்ஜோன்ஸ் ரக்குவானை, சொர்ணகாந்தி, சரோஜினி ஆகியோரின் மைத்துனரும் ஆவர். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு தாவடி மயானத்தில் நடைபெறும். இதை உற்றாரும், உறவினரும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

5938

## மக்கினொன் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்

உங்களை

திருச்சிராப்பள்ளி, மதுரை, பம்பாய், கோலாலம்பூர், சிங்கப்பூர், பரிஸ், லண்டன், துபாய், சவூதி அரேபியா, கனடா ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்ல

மற்றும்

பாஸ்போட், அமெரிக்கன் டிறவலர்ஸ் செக், உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட், சுற்றுலாக்கள் ஆகிய உங்கள் தேவைகளை

கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்துகொள்ள இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

மக்கினொன் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.,

தபால் பெட்டி இல: 92

6, மருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 8154

பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!!

## அரிய சந்தர்ப்பம்! காணத்தவறாதீர்கள்!!

யாழ். நகர் திறந்தவெளி அரங்கில் நாளை (3-6-80) மாலை

# மேஜர் சுந்தரராஜன்

மற்றும் திரைப்பட நடிகர்கள் நடிக்கும்

சென்னை என்னெஸ்ஸென் தியேட்டர்சார் அளிக்கும்

# கல்தூண்

தமிழகத்தில் 150 தடவை மேடைஏறி பரிசு பெற்ற நாடகம்

திரைப்படங்கள் போல் தயாரிக்கப்பட்டிருக்கும் இந்த நாடகங்களை மீண்டும் எப்போது பார்க்கமுடியுமோ?

டிக்கட் விபரம்:-: ரூபா 5, 10, 15, 25, 50

இரவு நகரிலிருந்து வெளியிடங்களுக்குச் செல்ல பஸ்சேவை உண்டு

புதன்

'அவன் பார்த்துப்பான்'

5936

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் அச்சகத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ஜூன் 2-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No. CE/8948/78. The Eelanaadu, Post Box No. 49, Telegram: "Eelanaadu, Phone: 389.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org